## (உ) கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையிலிருந்து குடிநீருக்காக தண்ணீர் திறத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள். திரு. கு.க. செல்வம் பேசியதைப்போல் நீங்களும் சுருக்கமாகப் பேசுங்கள்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுடைய உயிர்நாடியாக இருப்பது பேச்சிப்பாறை அணையாகும். பேச்சிப்பாறை அணை வழக்கமாக ஜூன் மாதத்தில் திறக்கப்படும் என்ற அடிப்படையில், விவசாயிகள் கடந்த மாதம் நாற்று நடும் பணிகளையெல்லாம் தொடங்கிவிட்டார்கள். ஆனால், பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தாலும், பாசனத்திற்காக அணை திறக்கப்படாத காரணத்தாலும், நடப்பட்ட நாற்றுகள் அனைத்தும் கருகிப் போகக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அணையிலிருந்து வரக்கூடிய தண்ணீர், எனது தொகுதிக்குட்பட்ட தோவாளை சேனல், என்.பி. சேனல், அனந்தனார் சேனல் உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள அனைத்து சேனல்களுக்கும் வராத காரணத்தால், நிலத்தடி நீர் குறைந்து, திறந்தவெளி கிணறுகளும், ஆழ்குழாய்க் கிணறுகளும் வறண்டுபோய், மக்களுக்கு மிகப்பெரிய அளவில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அணையைத் திறக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்ந்து நானும் கோரிக்கை வைத்திருக்கின்றேன். பொதுமக்களும், விவசாயிகளும் கருகிய நாற்றுகளோடு சென்று போராட்டம் நடத்தி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை வைத்திருக்கின்றனர். அதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சியரிடமிருந்தும், பொதுப் பணித் துறை நிருவாகத்திடமிருந்தும் அணையைத் திறப்பதற்கு அனுமதி கேட்டு கோப்பு அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். உட்காருங்கள்.*

## (ஊ) ஜெயங்கொண்டம், அனல் மின் திட்டம், நிறைவேற்ற வலியுறுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்.*